Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 18, 2024

திங்கட்கிழமை மார்ச் 18, 2024 | ஒளி: 09 கதிர்: 214 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# ஏப்ரல் 1 வரை நீடிப்பு

சிரமங்களுடன் கல்வி கற்கும் தரம் 1 முதல் தரம் 11 வரையான பாடசாலை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/25"க்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் ஏப்ரல் 1ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




# பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்?

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது தொடர்பில் அரசாங்கத் தலைவர்கள் அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



# "வயோதிபம் களை"

## இளைஞர்களுக்கு இடம் கொடுத்து விட்டுச் செல்வதில் அவர்களுக்கு விருப்பம் இல்லை

## வயதான எம்.பிக்கள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும்

இவ்வாறே தொடர்ந்தால் இன்னும் சிறிது காலத்தில் முழு பாராளுமன்றமும் பழைய சேறும் சகதியுமாக மாறிவிடும் என்றும் நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் பாராளுமன்றத்தில் உள்ள முதியோர்களை வெளியேற்றி விட்டு, இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென கெட்டம்பே ஸ்ரீ ராஜோப வானராமாதிபதி ராமன்ய நிகாயா கப்பிட்டியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் ரன்சிங்க, அவரை சென்று வழிபட்டதன் பின்னர் கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை:

# வாக்கெடுப்பு நேரத்தில் தாவலுக்கு வாய்ப்பு?



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொள்வதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கு எதிர்க்கட்சிகளும் ஆளும் தரப்பும் இந்த நாட்களில் இரகசிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் நான்கு முக்கிய அரசியல்வாதிகளின் வீடுகளில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது

தொடர்ச்சி P2

# "அந்த தேர்தலில்தான் சுரண்டி பார்க்க முடியும்"

எந்தவொரு கட்சிக்குள்ளும் தேர்தலுக்கு விருப்பமானவர்கள் மற்றும் விருப்பம் இல்லாதவர்கள் இருப்பார்கள் என்றும் இறுதி தீர்மானம் கட்சியின் தீர்மானமாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# "அச்சுறுத்தல் இல்லாதவர்களுக்கு பாதுகாப்பு நீக்கப்படும்"

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில், உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அரசியல்வாதிகள் உட்பட பல்வேறான தராதரங்களைக் கொண்ட முக்கியஸ்தர்கள் தொடர்பில், தேடியறிந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அரச புலனாய்வு சேவைக்குப் பணித்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கும் ஏனையவர்களுக்கும் தேவையற்ற வகையில் வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் விரைவில் நீக்கப்படுவார்கள் என்றார்.

தொடர்ச்சி P2



# யானை தாக்கி இருவர் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவு ஈரளக்குளத்தில் சனிக்கிழமை(16) இரவும், கிரான் பிரதேச செயலக பிரிவு திகிலி வெட்டையில் ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை யானை தாக்கி இருவர் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



### வட்டு. இளைஞன் கடத்தி கொலை:

# கடற்படையின் செயற்பாடு குறித்து தீவிர விசாரணை

எம்.றொசாந்த்

வட்டுக்கோட்டை இளைஞன் கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது, கடற்படையினர் நடந்து கொண்ட விதம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின், யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டையை சேர்ந்த இளைஞன் , தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்குச் சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாம் முன்பாக வன்முறை கும்பல் ஒன்றினால் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# "தவறுகளை ஆராய்ந்து வாக்குகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள்"

ஷேன் செனவிரத்ன

எதிர்வரும் தேர்தலில் உங்கள் வாக்குகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள், இந்த நாட்டை அழித்த பார்ப்பாரற்ற அரசியல்வாதிகளுக்கு ஏமாறாமல், அரசியல்வாதிகளின் கடந்த கால தவறுகளை ஆராய்ந்து உங்கள் வாக்குகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள் என முன்னாள் இராணுவ தளபதியான பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.



தொடர்ச்சி P2

### வெடுக்குநாறி விவகாரம்:


# ஜனாதிபதி இன்று சந்திக்க முஸ்தீபு

நிதர்ஷன் வினோத்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் இல்லத்தில் சனிக்கிழமை (16) இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 8 நபர்களின் வழக்கு நீதிமன்றத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் 18ஆம் திகதி திங்கட்கிழமை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

# கிணற்றில் தவறி விழுந்து சிறுமி பலி

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மதுரங்குளி, விருதோடை பிரதேசத்தில் சிறுமி ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி - விருதோடை பகுதியைச் சேர்ந்த 06 வயதுடைய பாத்திமா சனா எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



தொடர்ச்சி P2



### "இந்திய வீடமைப்பு திட்டத்தில்

# வெளிப்படை தன்மை இருக்க வேண்டும்"

ஒரு வீடு, ரூபா இருபத்து எட்டு இலட்சம் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளைக் கட்டும் நான்காம் கட்ட பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய வீடமைப்பு வேலைத் திட்டப் பணிகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் நன்கொடை உதவியுடனான இந்த திட்டம் தொடர்பில் இந்திய அரசுக்கு நன்றி கூறி, வீடு கட்டும் பணிகளை நாம் வரவேற்கிறோம். அதேவேளை இந்த திட்ட நடைமுறையில் முழுமையான வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைபாடாகும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்?

மக்கள் சக்தி உட்பட பல எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் சில பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு இந்த தருணத்தில் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதே சிறந்தது என பெரும்பாலானவர்கள் இந்த கலந்துரையாடலின் போது கருத்து வெளியிட்டதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பேரணி குளியாப்பிட்டியவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பாக, எதிர்வரும் நாட்களில் மேலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாகவும், அந்த பேச்சுவார்த்தையின் பின்னர் தேர்தல் என்ன என்பதைத் துல்லியமாக அறிவிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

## “அந்த தேர்தலில்தான் சுரண்டி பார்க்க முடியும்”

“மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி காலத்தில் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. நான் சொல்கின்றேன், பொதுத் தேர்தலை நடத்தினால் உண்மையான மக்கள் ஆணையைச் சுரண்டி பார்க்க முடியும். கட்சிக்குள் தனிப்பட்ட கருத்துகள் இருக்கமுடியும். தேர்தல் வேண்டாம் என்று கூறுபவர்களும் இருப்பார்கள். எனினும், அவையெல்லாம் தனிப்பட்ட கருத்தாகும். கட்சி தீர்மானிக்குமாயின், எந்த தேர்தலாக இருந்தாலும் அவற்றுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றார்.

# “வயோதிபம் கனைள்”

அரசு ஊழியர்கள் 60 வயதை எட்டிய பின், கடினமாக உழைக்க முடியாது என்பதால் ஓய்வு பெறுகின்றனர். ஆனால் பாராளுமன்றத்தில் ஓய்வு பெறும் வயதைக் கடந்தவர்கள் ஏராளம். சிலர் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று பாராளுமன்றத்துக்கு வருகிறார்கள். அடுத்த வேலையைச் செய்யப் பாராளுமன்றத்திற்கு வருகிறார்கள். இளைஞர்களுக்கு இடம் கொடுத்து விட்டுச் செல்வதில் அவர்களுக்கு விருப்பம் இல்லை. பாராளுமன்றத்திற்கு வரப் போராடுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு நாட்டு மக்கள் மீது எந்த உணர்வும் இல்லை. அவர்கள் நாட்டின் வளங்களை விற்று தங்கள் தலைமுறையை மகிழ்ச்சியடையச் செய்ய விரும்புகிறார்கள் என்றார்.

நாட்டில் ஒரு சாதாரண மனிதன் ஐம்பது அல்லது நூறு ரூபாய் திருடினால், அதிகபட்ச தண்டனை வழங்கப்படும். ஆனால், ஒரு பெரிய மனிதர் கோடிக்கணக்கில் அல்ல, பல கோடிக்கணக்கில் திருடினாலும், அவர்களுக்கு எதிராகச் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

நாட்டில் நிலவும் ஊழலுக்கு எதிராக? புரட்சி செய்து பதவியை இழந்தவர் ரொஷான் ரணசிங்க. பதவிகளைத் துரத்தி எதேச்சதிகாரமாகத் தன்னைப் பற்றி மட்டும் நினைத்துக் கொண்டு வேலை செய்தவர் அல்லர். இந்த இளம் எம்.பிக்களை போன்று நாட்டை நேசிக்கும் இளம் எம்.பிக்களும் உள்ளதாகவும், அந்த எம்.பிக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வயதான எம்.பிக்கள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும், அவர்கள் வெளியேறவில்லை என்றால் புதிய சட்டங்களைக் கொண்டு வாருங்கள் அல்லது அவற்றை நீக்குவதற்கான நேரம் இது என்றார்.

## கடற்படையின் செயற்பாடு...

தம்பதியினரை வன்முறை கும்பல் கடத்த முற்பட்ட வேளை, அவர்கள் கடற்படை முகாமினுள் தஞ்சம் கோரி ஓடியவேளை, கடற்படையினர் அவர்களைத் தாக்கி திருப்பி விரட்டியுள்ளனர். கடற்படை முகாமிற்கு அருகில் வைத்தே தம்பதியை வன்முறை கும்பல், வாகனத்தில் கடத்தி சென்றது.

கடற்படை முகாமிற்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் குறித்த சம்பவம் பதிவாகி இருந்த நிலையில், அது தொடர்பிலான காணொளிகள் ஊடகங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் ஊடகங்களில் வெளியான செய்திகளின் பிரகாரம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தனது சொந்த பிரேரணையாக எடுத்துக்கொண்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

## கிணற்றில் தவறி...

இந்த சிறுமி, தனது வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் வாளி ஒன்றின் உதவியுடன் தண்ணீர் எடுக்க வெள்ளிக்கிழமை (15) மாலை 6.30 மணிக்குச் சென்ற வேளையில், கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கிய சிறுமி மீட்கப்பட்டு, புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏப்ரல் 1 வரை நீடிப்பு

மேலதிக தகவல்களைப் பெற wfacebook.com/president.fund ஊடாக ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்பூர்வ முகநூல் பக்கத்தைப் பார்வையிடலாம்

## வாக்கெடுப்பு நேரத்தில்...

வாக்கெடுப்பின்போது எம்.பி.க்களை தங்கள் பக்கம் அழைப்பதுதான் ஆளுங்கட்சியின் எதிர்க்கட்சிகளின் முக்கிய குறிக்கோளாகும்.

இதற்கிடையில்? பல எம்.பி.க்கள் வாக்களிப்பதில் இருந்து விலகி இருக்க முடிவு செய்துள்ளதாகவும் அதே வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முடிவு தமக்கு சாதகமாக அமையும் பட்சத்தில், எதிர்வரும் தேர்தலில் அதனை பிரசாரக் கருவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என அரசாங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் தமது பாராளுமன்ற உறுப்பினர்களை ஊக்குவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை மீது எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் விவாதம் நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது. நம்பிக்கையில்லாப்பிரேரணை மீதான வாக்கெடுப்பு வரும் 20ம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெற உள்ளது.

## “அச்சுறுத்தல்...



பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில், உயரிக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அரசியல்வாதிகள் உட்பட பல்வேறான தராதரங்களைக் கொண்ட முக்கியஸ்தர்கள் தொடர்பில், தேடியறிந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அரச புலனாய்வு சேவைக்குப் பணித்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கும் ஏனையவர்களுக்கும் தேவையற்ற வகையில் வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் விரைவில் நீக்கப்படுவார்கள் என்றார்.

பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாத நபர்களுக்கு சுமார் 5,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமை காரணமாக சாதாரண கடமைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# யானை தாக்கி இருவர் மரணம்



இரு வெவ்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலான மரண விசாரணைகளை, திடீர் மரண விசாரணை அதிகாரிகளான எம்.எஸ். எம்.நஸீர், கே.பவளகேசன் ஆகியோர் கரடியனாறு மற்றும் சந்திவெளி பொலிஸாருடன் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று மேற்கொண்டனர்.

ஆவெட்டியாவெளியில் மாடு வளர்ப்பில் ஈடுபட்ட, சித்தாண்டியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான பத்மநாதன் மோகனதாஸ் (45) என்பவர் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று, பண்ணையை நோக்கி இரவு 09 மணியளவில் நடந்து செல்லும்போது ஈரளக்குளத்தில் வீதியோரமாக நின்ற யானையொன்றினால் தாக்குண்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

அத்துடன், திகிலிவெட்டை, குளத்துவெட்டையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நாகராசா முரளிதரன் (31) நண்பர் ஒருவருடன் நள்ளிரவு வேளை வலைவீசி மீன் பிடிக்கச் சென்று குளத்தின் ஓரமாக நின்ற மதுரை மரத்தின் கீழ் அதிகாலை வேளை படுத்துறங்கிய போது யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளார்.

இரு சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “தவறுகளை ஆராய்ந்து வாக்குகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள்”

கட்சி சார்பற்ற அமைப்பினால் கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்கா முன்பாக, ‘மக்கள் புரட்சியை நோக்கி நிராயுதபாணிகளின் போராட்டம்’ என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் இராணுவ தளபதி இதனை வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் நிலவும் சீர்கெட்ட அரசியல் கலாசாரம் மற்றும் தொலைநோக்கு பார்வையின்மை குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துமாறும், அரசியல்வாதிகளிடம் ஏமாறாமல் நாட்டின் எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்வோருக்கு தமது வாக்குகளைப் பயன்படுத்துமாறும் பொன்சேகா வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்கால சந்ததியினருக்காக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் மீது உணர்வுள்ள மக்களின் இதயத்துடிப்பை, எதிர்கால நெருக்கடிகளைப் புரிந்துகொள்ளக்கூடிய, ஆட்சியாளர்களை நியமிக்க வேண்டும் என்றார்.

நாட்டில் பாராளுமன்றமும் ஜனநாயகமும் இருக்க வேண்டும் என்றாலும் அரசியல்வாதிகள் கொள்கையளவில் செயற்பட வேண்டும் எனவும் தலையெடுக்கும் குப்பைகளைச் சேகரித்து அரசியலுக்குச் சென்றால் நாடு மீண்டும் சிக்கலில் மாட்டிவிடும் எனவும் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து, மாற்றத்தைக் கோரியதாகவும், ஆனால் பெரும்பான்மையான மக்களால் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தற்போது கற்பனை செய்து பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொன்சேகா தெரிவித்தார்.

தனது கட்சியின் இலாபத்தை அதிகரிப்பதற்காக எந்தவொரு மோசடிகாரரையும் கட்சியில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என வலியுறுத்திய பொன்சேகா, தனது தரப்பிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்கு எதிராகச் சட்டப் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டேன் என்றார்.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையின் படி எதிர்வரும் தேர்தலில் எவராலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# “வெளிப்படை தன்மை இருக்க வேண்டும்”

பெருந்தோட்டங்களில் இந்திய உதவியுடான தனி வீடுகள் கட்டும் திட்டத்தை, 2015-2019 ஆண்டுகால நல்லாட்சியின் பங்காளிகளாக இருந்த போது நாம் ஆரம்பித்து வைத்தோம். எமது கால பகுதியில் நடைபெற்ற இந்த வீடு கட்டும் பணிகளில்,

யூஎன்-ஹெபிடாட் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித வாழ்விட திட்டம் (United Nations Human Settlements Programme - UN-Habitat), இலங்கை செஞ்சிலுவை சங்கம் (Sri Lanka Red Cross Society - SLRCS), சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் (International Federation of Red Cross and Red Crescent Societies-IFRC) ஆகிய நம்பகத் தன்மை கொண்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் கட்டுமான பணிகளை நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு ஆகிய பொறுப்புகளைச் சிறப்பாகச் செய்தன.

பணிகளை கூட்டிணைக்கும் பொறுப்பை மாத்திரமே எமது புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு செய்தது. இதனால், இந்திய உதவியுடனான பெருந்தோட்ட வீடமைப்பு திட்டத்தில் முழுமையான வெளிப்படைத் தன்மை அன்று இருந்தது.

இன்று இந்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் இந்த பொறுப்புகளிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளன. ஆகவே வெளிப்படைத்தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைத்தான் எழுப்புகிறோம்.

அவற்றுக்குப் பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூற கடமைப்பட்டுள்ளார்கள் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

இந்தியா ஒட்டுமொத்தமாக 46,000 வீடுகளை இலங்கையில் வடகிழக்கிலும், 14,000 வீடுகளை பெருந்தோட்டங்களிலும் கட்டுவிக்கிறது. இதில் மூன்று கட்டங்களில் வடகிழக்கில் 46,000 வீடுகளும், பெருந்தோட்டங்களில் 4,000 வீடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. மிகுதி 10,000 வீடுகளில் 1,300 வீடுகள் நான்காம் கட்டத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முதல் மூன்று கட்டங்களிலும் மேற்சொன்ன நம்பகதன்மை கொண்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள்,கட்டுமான நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு பணிகளைச் செய்தன. அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அதிகார சபையும் பங்கு வகித்தது. இந்த முறை, அரசு சார்பற்ற நிறுவனங்கள் அகற்றப்பட்டு முழு பொறுப்பும் அரச நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகிய வற்றுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு வீடு, ரூபா இருபத்து-எட்டு இலட்சம் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளைக் கட்டும் பணி, எவரது கோரிக்கையின் பேரில், எக்காரணத்திற்காக அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்வி மலைநாடு முழுக்க இன்று எதிரொலிக்கின்றது. அதையே, இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களின் அதிக வாக்குகளையும், மலையக தமிழ் மக்களின் ஆணையையும் பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் இங்கே எழுப்புகிறேன்.


மேலும், இந்த திட்டம் தொடர்பில் “டெண்டர்” என்ற கேள்விப் பத்திர கோரல் நிகழ்ந்து, கட்டுமான “கொன்றாக்ட்டர்” என்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டனரா? அது நடந்து இருந்தால் எப்போது நடை பெற்றது? அதை நடத்திய நிறுவனங்கள் யாவை? “டெண்டர்” என்ற கேள்விப் பத்திர கோரல் தொடர்பில் அரச விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா?

வீடுகளைக் கட்ட, தோட்ட நிறுவனங்கள் காணிகளை விடுவித்து உள்ளனவா? அவற்றுக்கு மண் சரிவு அபாயம் இல்லை என்ற தேசிய கட்டிட ஆய்வு நிறுவன (NBRO) சான்றிதழ்கள் வழங்கபட்டுள்ளனாவா? ஜனாதிபதி செயலகத்தில் இந்த பணிகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, அதற்கு சமாந்திரமாக தோட்டங்களில் அடிக்கற்கள் நாட்டியவர்கள் யார்? அவர்கள் கட்டுமான “கொன்றாக்ட்” என்ற ஒப்பந்தத்தைப் பெற்றவர்களா?

இத்தகைய வெளிப்படைத்தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைத்தான் எழுப்புகிறோம். அவற்றுக்குப் பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூற கடமைப் பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி இன்று...

குறித்த சந்திப்பில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பகிஷ்கரிப்பதா? பங்கேற்பதா?

■ க.அகரன்

வெடுக்குநாறியில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யகோரி பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க கூறும் தரப்பு, சபாநாயருக்கு எதிரான விவாதத்தில் கலந்துகொள்ளாமல் விடுகின்றமை தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை (17) ஊடகங்களுக்கு கருத்து கூறும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கு எதிராகப் புதிது புதிதாகச் சட்டங்கள் இயற்றப்பட்டு கைது செய்யப்படுகின்ற நிலைமையே காணப்படுகிறது.

இதுவே வெடுக்குநாறி விடயத்திலும் பொய் குற்றச்சாட்டுக்களைப் போட்டு அவர்களை இன்று சிறை வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு விடுதலைச் செய்யப்படவேண்டும் என்பதை எமது நிலைப்பாடாக உள்ளது.

கட்டமைக்கப்பட்ட தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்கின்ற ஒரு அமைப்பு பாராளுமன்றத்தைத் தமிழ் பிரதிநிதிகள் பகிஷ்கரிக்க வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு கலந்துரையாடியதன் பிரகாரம் எமது கட்சி உறுப்பினர்களோடு கலந்துரையாடி அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்து இருக்கின்றோம்.

இது தொடர்பில் ஆறு திருமுருகன் அவர்களோடும் அகத்திகள் அடிகளாருடனும் இந்த முடிவுக்கு நாங்கள் சம்மதம் தெரிவித்து இருக்கிறோம். எனினும், 19ஆம் 20ஆம் திகதிகளில் நியாயப்பாடுகள் இல்லாமல் பக்கச் சார்பாக செயற்படுகின்ற சபாநாயகருக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் விவாதத்துக்கு வருகின்றது. இருபதாம் தேதி வாக்கெடுப்பு இடம்பெற இருக்கின்றது. ஆகவே இந்த பாராளுமன்ற அமர்வுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்தால் விவாதத்திலும் கலந்து கொள்ள முடியாமல் போகும்.

அங்கு எதிர்த்து வாக்களிக்க முடியாமல் போகும் நிலைமையும் உருவாகும் ஆகவே இது தொடர்பில் அழைப்பு விடுத்த கட்டமைப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கிறது.



அதுக்கு அப்பால் ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்கும் இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதனை மூடி மறைப்பதற்கும் இலங்கை பொருளாதார நிலைமையிலிருந்து காப்பாற்றுவதாகக் கூறி ஐ.எம்.எப்க்காக அரசோடு ஒட்டியதுடன் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை என தெரிவித்து இதற்கு முன்பு செயற்படும் அமைப்புக்கள் இன்று இவர்கள் வெற்றி பேசுகிறது.

அவர்களது விடுதலையைச் சாத்தியமாக இருக்குமாக இருந்தால் அது தொடர்பாக நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை. இவர்களது விடுதலைக்கு யார் முயற்சி எடுத்தாலும் நாங்கள் அதற்குத் தடையாக இருக்கப் போவதுமில்லை என தெரிவித்துள்ளார்.

# ஓட்டோ விபத்தில் ஒருவர் பலி

■ எஸ்.சதீஸ்



ஹட்டன்-புளியாவத்தை, சாஞ்சிமலை பிரதான வீதியில் முச்சக்கரவண்டி ஒன்று, வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த மூவர் டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ-கெர்க்கஸ்வோல்ட் மேல் பிரிவு தோட்டுப்பகுதியில் சனிக்கிழமை (16) இடம்பெற்ற திருமண நிகழ்வுக்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை 12 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

புளியாவத்தை மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தனபாலன் நிஷாந்தன் என்பவரே உயிரிழந்துள்ளார். இவர், பிலிங்போனி பகுதியில் உள்ள ஒரு தனியார் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்துள்ளார்.

சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்திய மீனவர்கள் 21 பேர் கைது

■ நிதர்ஷன் வினோத்

எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் ஞாயிற்றுக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நீரியல்வள திணைக்களத்தினரால் குறித்த 21 பேருக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# விபத்தில் ஒருவர் பலி; 37 பேர் காயம்

பூண்டுலோயாவில் இருந்து நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையத்திற்கு வழிபடுவதற்காகப் பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட 37 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயா ஹல்பொல பகுதியைச் சேர்ந்த பஹல்கெதர சுகதபால (வயது 79 ) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த 35 பேர் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், ஆபத்தான நிலையில் இருவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ‘கிண்ணியா’வை காணவில்லை




■ ஏ.எச்.ஹஸ்பர்

தென்னிந்திய நகைச்சுவை நடிகர் வைகைபுயல் வடிவேல் ஒரு படைத்தில், கிணற்றை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்தார். அந்த நகைச்சுவை வைரலாகியது. அதேபோன்ற சம்பவமொன்று கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா- தம்பலகாமம் பிரதான வீதியின் தம்பலகாமத்துக்கு அடுத்ததாக, வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக வைக்கப்பட்ட ‘கிண்ணியா’ எனும் பெயர் பலகையை பல மாதங்களாக காணவில்லை

சிவத்தப்பாலத்தடியில் நடப்பட்டிருந்த குறித்த பெயர்ப் பலகை இன்மையால், கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியை இனங்கண்டுக்கொள்வதில், வெளியில் இருந்து வரும் பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

**“ சிவத்தப்பாலத்தடியில் நடப்பட்டிருந்த குறித்த பெயர்ப் பலகை இன்மையால், கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியை இனங்கண்டுக்கொள்வதில், வெளியில் இருந்து வரும் பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர். வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக நடப்பட்ட குறித்த பெயர் பலகை பலமாத காலமாக காணாமல் போயுள்ளது**

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக நடப்பட்ட குறித்த பெயர் பலகை பலமாத காலமாக காணாமல் போயுள்ளது.

இது தவிர புதிதாக அமைக்கப்பட்ட பல காபட் வீதிகளுக்கான முறையான பெயர் பலகையும் அமைக்கப்படவில்லை. இதனால், வெளி மாவட்டங்களில் இருந்து வரும் பாதசாரிகள் வீதிகளை தேடியும் அங்கும் இங்கும் அலைகின்றனர். எனவே, இது தொடர்பில் உரிய சபை நடவடிக்கை எடுத்து வீதிகளுக்கான பெயர் பலகைகளை நடுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# தலைக்கவசம் அணியாமல் பயணித்த இளைஞன் மரணம்




■ எம்.றொசாந்த்

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்தில் சிக்கிய இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்- பளையை சேர்ந்த சாந்தலிங்கம் நிரோசன் எனும் 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய, குறித்த இளைஞன் தலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்துக்குள்ளானதால் தான் தலையில் படுகாயம் ஏற்பட்டது என மரண விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

# நபரின் சடலத்தை அடையாளம் காட்டவும்

■ செ.திவாகரன், டி.சந்ரு



நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத நிலையில், பிரேத அறையில் நபர் ஒருவரின் சடலமொன்று வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரை இனங்காண உதவுமாறும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத்தில் நானுஓயா சுரங்கப்பாதைக்கு அருகில் வைத்து கடந்த திங்கட்கிழமை(11) மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் உயிரிழந்தவர் 55 முதல் 65 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும், 5 அடி 1 அங்குல உயரம் கொண்டவர் எனவும் அவர் பச்சை நிற சட்டையும் கருப்பு நிற நீண்ட காற்சட்டை அணிந்துள்ளதாகவும் அதில் 4,000 ரூபாய் பணமும் இருந்ததாகவும் நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனங்காணப்படாத நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை இனங்காண உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

# வழிகாட்டல் கண்காட்சி

■ செ.தி.பெருமாள்

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் வழிகாட்டலில் மனிதவள மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் நுவரெலியா மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தின் ஏற்பாட்டில் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண்காட்சி நுவரெலியா மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.பி.கே.போதிமன்னா தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கல்வி கண்காட்சியில், உயர்கல்வி பாட வாய்ப்புகள், வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புகள், உயர்கல்வி உதவித்தொகை, உயர்கல்வி கடன் வசதிகள், தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# அமைச்சர் ஜீவனின் 30 நாட்கள் காத்திருப்பு கோரிக்கை

பெருந்தோட்ட தொழிற்சங்கவாதிகளும், அரசியல்வாதிகளும், பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வருவதில் கைதேர்ந்தவர்கள். சற்று பின்னோக்கிச் சென்று கடந்த காலத்தைப் பார்த்தோமென்றால், அத்தனையும் அப்படியே தெரியும்.

இறுதியாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பிரச்சினையைப் பார்த்தால், தீபாவளி, பொங்கல், புது வருடம் என்று காலத்தைக் கடத்திக்கொண்டு சென்ற வரலாறுகள் உள்ளன.

தங்களால் முடியவில்லையெனில், “சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க எங்களுக்கு இடமளிக்கவில்லை, ஆகையால், நீங்கள்! பெற்றுக்கொடுங்கள்” என கையை விரித்து பந்தையும் எதிர் தரப்பினர் பக்கத்துக்கு வீசிவிடுவர். அந்த தரப்புக்கு எவ்விதமான அதிகாரமும் இருக்காது.

சம்பள உயர்வு தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினரே இவ்வாறு கையை விரித்து விட்டு, வேடிக்கை பார்ப்பார். இடையில், தொழிலாளர்களையும் உசுப்பேற்றி விட்டு, போராட்டத்திலும் ஈடுபடுவர்.

இரண்டொரு நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் தொழிலாளர்கள் ஈடுபடுவார்களாயின், தொழிலாளர்கள் வயிற்றிலேயே அடிவிழும், அதன்பின்னர், நாங்கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம். எல்லோரும் வேலைக்குத் திரும்புங்கள் என அழைப்பு விடுவார்கள். இவையெல்லாம் கடந்த காலங்களில் அரங்கேற்றப்பட்ட கூத்துக்கள். அதேபோல்தான், 30 நாட்கள் நாடகமும் அரங்கேறும் என்று பலரும் கருத்துரைத்துள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரத்தில், தள்ளிப்போடுதல் முதன்முறையாக இருக்குமாயின், பரவாயில்லை. எனினும், ஏமாற்றும் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டே சென்றமையால் இவ்வாறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது சாதாரணமாகும்.

ஆகையால், எதிர்வரும் 30 நாட்களுக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு உரியத் தீர்வை பெற்றுக் கொடுக்கும் தரப்பினரை, பெருந்தோட்ட மக்களின் மனங்களில் இருந்து ஒருபோதும் அகற்ற முடியாது. அவ்வாறான விஷ பரீட்சையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இறங்கியுள்ளார்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்கப்பெறும். நாட்சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாவை பெறமுடியும் என்று ஜீவன் தொண்டமான் வியாழக்கிழமை(14) தெரிவித்துள்ளார். அப்படியாயின், சம்பள உயர்வு பிரச்சினைக்கு ஏப்ரல் 16ஆம் திகதிக்கு முன்னர் உரிய தீர்வு கிடைக்க வேண்டும்.

பேச்சுவார்த்தையில் சாதகமான தீர்வு கிடைக்காவிடின், தமிழ்-சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர், தீர்வு கிடைக்கும், புத்தாண்டைக் கொண்டாடி விட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வோம். இல்லையேல், வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக, சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்றெல்லாம் கதைகள் அளக்கக்கூடும்.

மலையக மக்களின் தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர், பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்திலேனும், ஓரணியில் நின்றால் மட்டுமே, வெற்றி பெற முடியும். பிரிந்து நிற்பது, முதலாளி மார்களுக்கே சாதகமாக அமையும். இவை கடந்த கால படிப்பினையாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# 13ஐ படுத்தும் பாடு

லக்ஸ்மன்

மாற்றம் ஒன்றே மாறாதது. மாற்றத்தில் மாற்றமில்லை. ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது மாற்றத்திற்குப்படுத்த முடியாத மன்னர் காலக் கல்வெட்டல்ல. நாட்டு நலன், மக்கள் நலன் கருதி மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அது வரவேற்கப்பட வேண்டியது என்பதுடன், ஏற்கப்படவேண்டியதே. ஆனால், இலங்கையில் நாட்டினதோ, மக்களதோ நலன் கருத்தில் கொள்ளாது அரசியல்வாதிகளின் தேவைகளே முன்னிலைப்படுத்துகின்றன.

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட 20 திருத்தங்களும் எந்த நோக்கங்களுக்காக நிறைவேற்றப்பட்டது. நாட்டு நலன் கருதியா? மக்கள் நலன் கருதியா? இன மத மொழி சமத்துவம் கருதியா? என்ற கேள்வியை நாம் எழுப்பினால் பதில் நேர்மறையாக அல்ல எதிர்மறையாகவே அமையும். அரசியலமைப்பின் சில திருத்தங்களை மாத்திரம் இந்த இடத்தில் உதாரணம் காட்டலாம்.

2ஆவது திருத்தம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரை அரச கட்சிக்கு மாறிய வேளை அவரது உறுப்புரிமையைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. 4ஆவது திருத்தம் முற்றுமுழுதான ஜனநாயக விரோதமாகப் பொதுத்தேர்தல் நடத்தாது பாராளுமன்ற ஆயுட் காலத்தை நீடிக்கக் கொண்டுவரப்பட்டது.

> **13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாது போனாலும், பல குறைபாடுகளுடன் வடக்கு, கிழக்கு தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது**

6ஆவது திருத்தம் நாட்டின் ஒருமைப்பாட்டினை காப்பாற்றுவது எனும் பெயரில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றிலிருந்து அகற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. 13ஆவது திருத்தம் தமிழ் மக்களது உணர்வுகளைப் புரியாத அரசுகளின் நடத்தை காரணமாக இந்நாட்டின் உள்விவகாரங்களில் இந்தியத் தலையீட்டுக்கு வழிவகுத்தது. 18ஆவது திருத்தம் யுத்த வெற்றி கதாநாயகனான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவினது அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள ஏற்படுத்தப்பட்டது.

19ஆவது திருத்தம் அப்போதைய பிரதமர் ரணிலின் அதிகாரத்தை பலப்படுத்த ‘ஜனநாயக முலாம் பூசி’ ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு ஒவ்வொன்றைப் பற்றியும் பாரார்த்தால் நோக்கங்கள் புலப்படும்.

ஆனால், இப்போது புதிதாக ஒரு திருத்தம் ஏற்கெனவே இருக்கின்ற 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்கின்ற தனிநபர் பிரேரணையாக உருவம் பெறுகிறது.

நாட்டில் பெரும்பான்மை மக்களால் நேசிக்கப்பட்ட பெரும்பான்மை மக்களைக் கையாளக்கூடிய தலைவர்களாக இருந்தவர்கள், இன்று இருப்பவர்கள் நாட்டு நலனுக்காகச் செய்யாததை பிவிதுரு கெல உறுமயவின் உதய கம்மன்பில செய்து முடிக்க முயன்றிருக்கிறார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை, பன்மைத்துவத்தை, இன, மத, மொழிச் சமத்துவத்தை உணராது எடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற முன்னுரிமைகள் எதற்காக என்ற கேள்வி இந்த இடத்தில் தோன்றும்.

2009இல் மகிந்த ராஜபக்‌ஷ யுத்தத்தை வென்றார். பெரும்பான்மை மக்களின் மனம் கவர்ந்தார். சர்வதேசத்துக்கு எம் நாட்டின் இனப்பிரச்சினைக்கு 13 எனும் கருதுகோளை ஏற்படுத்தி சர்வதேசத்தை இணங்கச் செய்தவர். ஆனால், 13 பிளஸ் பிளஸ் என கூறி, 13ஐ மைனஸ் ஆக்கிய பெருமைக்குரியவர். இருந்தாலும், அதிகார வெறி அவரை அடியோடு மாற்றிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்துவதில் இத்தனை வருடகாலமாக அரசாங்கம் ஏன் முழுமையான அக்கறையைச் செலுத்தவில்லை என்பது இன்னமும் புரியவில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்குத் தீர்வாக இந்த மாகாண சபை முறைமை அமையும் என்ற நம்பிக்கை அன்றைய நிலையில் முழுமையாக இருக்கவில்லை என்பது உண்மை. காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கும் வகையில் வடக்கு, கிழக்கை இணைத்து 8 மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.
மாகாண சபை முறையின் ஊடாக, காணி, நிதி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், மத்திய அரசாங்கமானது இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை வழங்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து, வடக்கு, கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் 2007ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரித்து உத்தரவு பிறப்பித்தது.

> **ஈழத்தமிழர் தமிழ் பேசும் மக்களின் இணைபிரியா வடக்கு, கிழக்குத் தாயகம் என்ற சிந்தனையைத் தவிடு பொடியாக்கும் வகையில், மேலும் ஒரு முயற்சியை உதய கம்மன்பில மேற்கொள்வது மேலும் மேலும் அதிகாரமற்றவர்களாகவே வைத்திருப்பதற்கான முயற்சியாகவே இதனைப் பார்க்க முடியும்**

வடக்கு, கிழக்கு மாகாண சபையைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அதன் முழுமையான நடைமுறைப்படுத்தலின்மை காரணமாகவே அன்றைய முதலமைச்சர் வரதராஜ பெருமாள் தமிழீழத்தினைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்குச் சென்றார்.

13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாது போனாலும், பல குறைபாடுகளுடன் வடக்கு, கிழக்கு தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது.

இரு சபைகளும் கலைக்கப்பட்டுப் பல வருடங்கள் கடந்த பின்னரும் தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால், ஆளுநர்களின் அதிகாரத்தின் கீழே இச் சபைகள் இரண்டும் இப்போது இயங்கி வருகின்றன.

இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பில் வேரூன்றிய சட்டவிதிக் கூறுகளைக் கொண்டுள்ள நிலையில், இனப் பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்ரியைக் கோரும் தமிழர்கள் 13யேனும் அரசாங்கம் வழங்கும், அதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். அரசியல் யாப்புத் தொடர்பான கள யதார்த்தங்களுக்கு மத்தியிலும் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத் தரப்புகளிடம் உச்சபட்சக் கோரிக்கைக்கான தீர்வாக எதனைக் கோருவது என்ற கேள்விக்குப் பதிலாக 13ஆம் திருத்தத்தையேனும் உடனடித் தீர்வாக வழங்குவதற்கு இந்தியா ஒத்துழைக்கும் என்று தமிழர்கள் இப்போதும் நம்புகின்றனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற போர்வையிலும் தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையிலும் வடக்கு, கிழக்கு மீதான நெருக்கடிகளும் அத்துமீறல்களும் நடந்து வருகின்றன. அத்துடன் இப்போது தொல்பொருள் சட்டமும் ஆதிக்கம் செலுத்துகிறது. இது தமிழர்கள் மீதான இன அழிப்புக்குக் காரணமாகிவிடுமா என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டு வருகிறது.

13ஆவது திருத்தத்தினை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டை மேற்கொள்ளாது தன்னுடைய தந்திரத் தனத்தினைப் பயன்படுத்தி காலங்கடத்துவதற்கான செயற்பாடுகளை சர்வ கட்சிச் சந்திப்பென்றும், நிபுணர் குழு அமைத்தலென்றும் மேற்கொண்டு வருகிறார்.


ஈழத்தமிழர் தமிழ் பேசும் மக்களின் இணைபிரியா வடக்கு, கிழக்குத் தாயகம் என்ற சிந்தனையைத் தவிடு பொடியாக்கும் வகையில், மேலும் ஒரு முயற்சியை உதய கம்மன்பில மேற்கொள்வது மேலும் மேலும் அதிகாரமற்றவர்களாகவே வைத்திருப்பதற்கான முயற்சியாகவே இதனைப் பார்க்க முடியும். சிங்கள பௌத்த மேலாண்மையின் மகாவம்ச மனநிலையோடு முன்னெடுக்கப்படும் முயற்சியாகவும் இதனைக் கூறமுடியும்.

2009ற்குப் பின்னரான கடந்த 15 வருடங்களிலும், நாடு கண்டிருக்கின்ற பல்வேறு சவால்களையும் சிங்களப் பேரினவாதம் இதுவரை சீர்தூக்கிப் பார்க்கவில்லை. அரசியற் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவைக் காட்டவில்லை.

திம்பு தீர்மானம் முதல் அதன் பின்பு வந்த ஒப்பந்தங்கள். பேச்சுக்களின் முடிவுகள், தீர்மானங்கள் எல்லாமே இலங்கைத் தமிழர்களின் முரண்பாட்டைத் தீர்த்து வைக்கவில்லை. இவ்வாறிருக்கையில் இப்போதும் 13ஐ மேலும் பலவீனப்படுத்த முனைவது கடும் போக்குச் சிங்கள அரசியல்வாதிகளின் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கக் கூடாது என்ற திடமான மனோநிலையையே இது காட்டிநிற்கிறது.

இவ்வாறிருக்கையில், அபிவிருத்தி அரசியலும் நல்லிணக்க மாயையும் பூசப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பூசி மெழுகலை நாம் எவ்வாறு நம்பி நகரமுடியும் என்பதே கேள்வி.

தூங்குபவர்களைத் தட்டியெழுப்பலாம், புரியாதவர்களுக்குப் புரிய வைக்கலாம், அறிவில்லாதவர்களெனின் அறிய வைக்கலாம். அறிந்து கொள்வதற்கான பக்குவத்திலுமில்லையால் நாட்டின் எதிர்காலத்துக்காக விசப்பரீட்சை விளையாட்டை மாத்திரமே நடத்த முடியும். எது எவ்வாறிருந்தாலும், 13ஐ சிங்களப்பேரினவாதம் படுத்தும் பாடுகள் எப்போது முடியும் என்று மாத்திரமே சிந்திக்க முடியும்.



## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும்.

எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோவிதமாக வரும் சின்னச்சின்னப் பிரச்சினைகள் வரலாம்; அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல; வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உடனடியாக சீரமைக்க வேண்டும்

மஸ்கெலியா நகரிலிருந்து காட்மோர் வரையிலான பிரதான வீதியின், டி.சைட் முற்சந்தி வரையான 06 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட சுமார் 04 கிலோமீற்றர் வீதி பல வருடங்களாக மிகவும் புனரமைக்காமல் காணப்படுவதால் அப்பகுதி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியினூடாக காட்மோர் தொடக்கம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலை அவசர சிகிச்சைகளுக்காகக் கொண்டுவரப்படும் கர்ப்பிணிகள் மற்றும் நோயாளர்கள் மரணித்துள்ளனர் எனவும் வாகனங்களை இயக்க முடியாமல் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த தேர்தல் காலங்களில் இந்த வீதியைச் செப்பனிடுவதற்காக மெட்டல் மற்றும் மணல் கொண்டு வரப்பட்டு வீதியோரங்களில் குவிக்கப்பட்டு இருந்தது அதன் பின்னர் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

குறித்த வீதியை அதிகாரிகள் உடனடியாக சீரமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- காமினி பண்டார இளங்கந்திலக



# SLT டிஜிட்டல் சேர்விசஸ் உடன் Cey-Nor Foundation லிமிடெட் பங்காண்மை

கொழும்பு - படகு மற்றும் கடற்றொழில் சாதனங்களை உற்பத்தி செய்வதில் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கும் Cey-Nor Foundation லிமிடெட், தனது மெருகேற்றம் செய்யப்பட்ட இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது.

சர்வதேச சென்றடைவு மற்றும் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் ஈடுபாடு ஆகியவற்றை உறுதி செய்வதற்கான மூலோபாய நகர்வை இதனூடாக வெளிப்படுத்தியுள்ளது. SLT டிஜிட்டல் சேவைகளின் மீது நம்பிக்கை கொண்டுள்ள Cey-Nor இன் நோக்கம், இன்றைய டிஜிட்டல் காலகட்டத்துக்கு பொருத்தமான வகையில் இயங்குவதாக அமைந்துள்ளது.

Cey-Nor Foundation லிமிடெட் தவிசாளர் கலாநிதி. துலான் ஹெட்டியாரச்சி குறிப்பிடுகையில், சர்வதேச சந்தைகளில் நிலவும் மீன் பொருட்களுக்கான கேள்வியை இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை நிலவுகின்றது. குறிப்பாக, ஐரோப்பா மற்றும் ஜப்பானிய சந்தைகளில் இந்த வாய்ப்புகள் காணப்படுகின்றன.

“இரு நூற்றாண்டு காலமாக, நாம் தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பாரம்பரிய பொருட்களை ஏற்றுமதி செய்கின்றோம். அதுபோன்று, இந்த சந்தைகளுக்கு மீன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

Cey-Nor அதன் படகு கட்டும் ஆற்றலுடன், ஃபைபர் படகு தயாரிப்பை மேம்படுத்தி, நிலைபேறாண்மைக்காக சூரிய வலுவை பயன்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முன்வந்துள்ளது.” என்றார்.




மீன்பிடித்துறையின் முக்கியத்துவத்தைப் பற்றி ஹெட்டியாரச்சி குறிப்பிடுகையில், 2009 ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் காரைநகரில் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு பணிகளில், Cey-Nor இன் ஈடுபாட்டினூடாக, கடற்றொழில் துறைக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்படாமல், சுற்றுலாத் துறைக்கும் பங்களிப்பு வழங்கப்பட்டது. குறிப்பாக திமிங்கிலங்கள் பார்வையிடலுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது என்றார்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள Cey-Nor இணையத்தளம் வெளிப்படைத்தன்மை, புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய தன்மை போன்றவற்றுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாகும். பிரதான உள்ளம்சங்களில், தொழிற்துறை போக்குகள், தயாரிப்பு அறிமுகம் மற்றும் நிறுவன செய்திகள் பற்றிய உடனுக்குடனான பதிவேற்றங்களினூடாக, பங்காளர்களுக்கு ஈடுபாட்டை பேணவும், தகவல்களை அறிந்திருக்கவும் முடியும். விருந்தினர்களுக்கு Cey-Nor இன் பரந்தளவு சேவை வழங்கல்கள் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல் நாளிகைகள் பற்றிய தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

SLT டிஜிட்டல் சேர்விசஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “Cey-Nor Foundation லிமிடெட்டுடன் இணைந்து, அவர்களின் டிஜிட்டல் பிரசன்னத்தை மேம்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை உண்மையில் எமக்கு பெருமையாக உள்ளது. வியாபார செயற்பாடுகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். புதிய சர்வதேச சந்தைகளில் இந்த பங்காண்மையினூடாக புதிய வாய்ப்புகள் கிடைக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.” என்றார்.

# இலங்கையின் சிறந்த SME வங்கியாக கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியானது, 2024 ஆம் ஆண்டுக்கான குளோபல் ஃபினான்ஸ் விருதுகளில் இலங்கையின் ‘சிறந்த SME (சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவு) வங்கியாக’ அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவிகள் மற்றும் நலன்களை வழங்கும் வங்கியின் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவுக்கு பாரிய கடன் வழங்குபவராக ஏற்கனவே நிதியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி, இந்தத் துறையில் மதிப்புமிக்க குளோபல் ஃபினான்ஸ் விருதை தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் பெற்றுள்ளது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள தங்கள் நாடுகளில் சிறந்த SME வங்கிகளாக கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் OCBC - சிங்கப்பூர், மேபேங்க் - மலேசியா, Sumimoto Mitsui நிதிக் குழு - ஜப்பான், HDFC வங்கி - இந்தியா, பிரைம் வங்கி - பங்களாதேஷ் மற்றும் Vietcom bank - வியட்நாம் என்பனவாகும்.

இந்த அண்மைய விருது குறித்து கொமர்ஷல் வங்கியின் தனியார் வங்கிப் பிரிவு பிரதி பொது முகாமையாளர் திலக்ஷன் ஹெட்டிஆரச்சி கருத்துத் தெரிவிக்கையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவானது (SME) எமக்கு எப்பொழுதும் முதன்மையான முன்னுரிமையாகும், மேலும் இலங்கையின் SME துறைக்கு கொமர்ஷல் வங்கி மிகப்பெரிய கடனுதவி வழங்குவதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் எங்கள் SME வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து பல நிலைகளில் இணைந்து செயற்படுகிறோம், அவர்களுக்கு அறிவையும் திறனையும் உருவாக்க உதவுவதுடன் மற்றும் வலையமைப்பு வசதிகளை வழங்குவதுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான அணுகலை எளிதாக்குகிறோம்.




SME துறையினரை ஆதரிப்பதற்காக கொமர்ஷல் வங்கியின் மிக சமீபத்திய நிதியல்லாத முன்முயற்சிகளாக ஆரம்பித்து வைக்கப்பட்டவையே ‘கொமர்ஷல் பேங்க் LEAP Global Linker’ மற்றும் ComBank Trade Club’ ஆகியன. இவை இரண்டும் வர்த்தக முயற்சிகளை உலகளாவிய சந்தைகளில் ஊடுருவ உதவுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக, கொமர்ஷல் வங்கி SME வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேக சங்கமொன்றைக் (Club) கொண்டுள்ளது.

நாட்டிலேயே முதன்முறையாக, கொமர்ஷல் வங்கி Biz Club ஆனது புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதற்காக SME யினரை ஒன்றிணைத்து அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு அப்பால் கல்வி, வலையமைப்பாக்கம் மற்றும் தொடர்புடைய அதிகாரசபைகளின் நிபுணர் ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குகிறது.

5,000க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் (SME யினர்) தற்போது கொமர்ஷல் வங்கியின் Biz Club இல் உறுப்பினர்களாக உள்ளனர்.

> **“ நாட்டிலேயே முதன்முறையாக, கொமர்ஷல் வங்கி Biz Club ஆனது புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதற்காக SME யினரை ஒன்றிணைத்து அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு அப்பால் கல்வி, வலையமைப்பாக்கம் மற்றும் தொடர்புடைய அதிகாரசபைகளின் நிபுணர் ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குகிறது. 5,000க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் (SME யினர்) தற்போது கொமர்ஷல் வங்கியின் Biz Club இல் உறுப்பினர்களாக உள்ளனர்**

கொமர்ஷல் வங்கியின் ‘திரிசக்தி’ நுண் தொழில்முயற்சியாளர் கடன் திட்டம் மற்றும் கிராமப்புற பெறுமதி வாய்ந்த சங்கிலிகளை வலுப்படுத்தும் பெறுமதி சங்கிலி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ‘வர்த்தக கடன்கள்’ (Biz Club) மற்றும் ‘விவசாய தங்கக் கடன்கள்’ (Agri Gold Loans) போன்ற வசதிகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை உள்நாட்டு SME பிரிவினருக்கு உதவுவதற்காக நடைமுறையில் உள்ள ஏனைய திட்டங்களாகும். மேலும் நாட்டிலுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களை ஆதரிப்பதற்கான முயற்சிகளும் இதில் உள்ளடங்குகின்றன.



### கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு

# வாழ்நாள் சாதனையாளர் விருது

உலக தமிழ் சங்கத்தின் 31ஆம் ஆண்டு விழாவில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் அவர்களின் சேவைக்காக வாழ்நாள் சாதனை விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை ஜானகி கல்லூரி அரங்கில் இடம்பெற்ற விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விஞ்ஞானி வீர முத்துவேல், நல்லி குப்பசாமி செட்டியார் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களுக்குக் கடந்த காலங்களில் சமூக சேவைக்காக உலக சாதனைப் புத்தகத்தில் உலக சாதனையாளர் விருது வழங்கப்பட்டிருந்த நிலையில், இதற்போது வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உலகத்தில் பல தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கின்ற போதிலும் இலங்கையைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல் தலைமைக்கு சமூக சேவைக்காக உலக தமிழ்ச் சங்கத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இளம் வயதில் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த செந்தில் தொண்டமான், மாகாண அமைச்சராக இருந்த காலகட்டத்தில் பதுளை மற்றும் மொனராகலை பகுதிகளில் தோட்ட புற தமிழ் மக்களுக்கு 64 சதவீத மாத்திரம் வழங்கப்பட்ட மின்சாரத்தைக் குறுகிய காலத்தில் முழுமையாக 100 சதவீத வழங்கி சாதனை படைத்தார்.

ஊவா மாகாணத்தில் 40 வருட காலமாகப் பதிவு செய்யப்படாமல் இருந்த 250 விளையாட்டு கழகங்களை இளைஞர்களின் நலன் கருதி ஒரே மாதத்தில் பதிவு செய்து இளைஞர்களுக்கு விளையாட்டுத்துறையில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தமை, இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மலையகத்தைச் சேர்ந்த 15,000 முதியோர்களுக்கு முதியோர் கொடுப்பனவு வழங்கியமை, இலங்கை முழுவதும் பொருளாதார பின்னடைவில் உள்ள 40 இலட்சம் குடும்பத்திற்குத் தமிழக அரசிடம் இருந்து 40 ஆயிரம் மெட்ரிக் டொன் அரிசி, 100 மெட்ரிக் டொன் மருந்து 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 500 மெட்ரிக் டொன் பால் மா என்பவற்றை பெற்றுக்கொடுத்துடன், அதனைத் தானே முன்னின்று நாடுமுழுவதும் முழுமையாக விநியோகம் செய்து சிறந்த நிர்வாகத்திறனை வெளிப்படுத்தியமைக்காக இந்திய அரசு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வந்த சூழ்நிலையில் செந்தில் தொண்டமான் பாண்டிச்சேரி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கை அரசாங்கத்திற்கு மருந்துகளைப் பெற்றுக்கொடுத்தார்.

10,000 மேற்பட்ட முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலி, செவிப்புலனற்றோருக்கான கருவி போன்ற உபகரணங்கள் வழங்கி வைத்தார்.

அத்துடன், மலையக பெண்களுக்கு முதன்முறையாகப் பயிற்சியளித்து ஓட்டுநர் அடையாள அட்டைகள் செந்தில் தொண்டமானால் பெற்றுக்கொடுக்கப்பட்டமை. இலங்கை அரசாங்கத்தால் இந்திய மீனவர்கள் 6 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பொழுது, செந்தில் தொண்டமானின் முயற்சியால் அவர்கள் விடுவிக்கப்பட்டமை, கடந்த காலங்களில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 1,000ற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களையும் 100ற்கும் மேற்பட்ட படகுகளையும் செந்தில் தொண்டமானின் முயற்சியால் விடுவித்தமை, செந்தில் தொண்டைமானின் அயராத உழைப்பாலும், அரசியல் வளர்ச்சியாலும் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மலையக தமிழர் ஒருவர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டமையை எண்ணி மலையக மக்கள் பெருமிதம் கொண்ட அதேவளை, மலையக தமிழர் ஒருவர் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஆளுநராக நியமிக்கப்பட்டமையை எண்ணியும் மலையக மக்கள் பெருமிதம் கொண்டனர்.

2006இல் இந்தியாவில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு பீட்டா அமைப்பால் தடை விதிக்கப்பட்ட போது, போராட்டங்களை முன்னெடுத்து, சட்ட ரீதியாக இப்பிரச்சினையை அணுகி ஜல்லிக்கட்டை மீட்டெடுத்து தமிழ் கலாசரத்தை நிலைநாட்ட செந்தில் தொண்டமான் முக்கிய பங்கு வகித்தார்.

ஜல்லிக்கட்டுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்தியாவில் முதன்முறையாக செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில், இந்திய அரசால் தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டது.

தமிழ் கலாசாரத்தை கடல் கடந்து நிலைநாட்டுவதற்காக பிரான்சில் திருவள்ளுவர் சிலை திறந்து வைத்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நேரடி பாராட்டுக்களை பெற்றமை. 40 வருடகாலமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக உரிமைகள் அற்ற சமூகமாக, முடங்கி கிடந்த நிலையில், அவர்களுக்கு செந்தில் தொண்டமான் முதன்முறையாக கடவுச்சீட்டுகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு, அம்மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் முதல் கட்டமாக 200 பேருக்குக் கடவுச்சீட்டுகளை வழங்கி இவ்வேளை, திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையில் வடகிழக்கில் காணி உரிமைக்காக யுத்தம் இடம்பெற்று. பல்லாயிரம் கணக்கான மக்கள் காணி இன்றி அவதியுறும் நிலையில் கிழக்கு மாகாணத்தில் செந்தில் தொண்டமானின் கடும் முயற்சியால் 06 மாதத்திற்குள் 2,000இற்கும் மேற்பட்டோருக்குக் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கையில் வரலாறு காணாத வகையில் 1,008 பொங்கல் பானைகள், 1,500 பரதநாட்டிய கலைஞர்களின் நடனம், 500 கோலங்களுடன் தமிழ் கலாசாரத்தை உலகறிய செய்யும் வகையில், இலங்கை வரலாற்றில் முதன்முறையாகச் செந்தில் தொண்டமானால் பொங்கல் விழா திருகோணமலையில் நடத்தப்பட்டதோடு, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழகத்தைத் தாண்டி சர்வதேசத்தில் முதல் முறையாக நடத்தப்பட்டு சாதனை படைத்தது.

மேலும், இலங்கை இந்தியத் தூதுவர்களுக்கு இணையாக இந்தியாவிற்கும் இலங்கைக்குமான பாலமாகச் செந்தில் தொண்டமான் செயற்பட்டு வருவதோடு, இலங்கைக்கு இந்தியாவிற்கும் இடையிலான பல இராஜதந்திர முடிவுகளில் செந்தில் தொண்டைமானின் பங்களிப்பு காணப்படுகிறது.

இவ்வாறு சமூகத்திற்காக எண்ணிலடங்காத பல சேவைகளை முன்னெடுத்து வரும் தமிழ் தலைவர்களில் வலிமை மிக்க தலைவராக செந்தில் தொண்டைமான் அடையாளம் காணப்பட்டு, வி.ஜே.பி சந்தோசம் அவர்களால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வைக்கப்பட்டதுடன், இந்தியாவை உலகளவில் வியந்து பார்க்க வைத்த ஒரு தமிழராய் அறிவியலாளராய் சந்திரயான்-3 விண்கலத்தை நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கி தடம் பதித்த அறிவியலாளர் வீரமுத்து வேல் மற்றும் தனது இளம் வயது முதல் தற்போது வரை ஜவுளித்துறையில் சாதனைப்படைத்து, தேசிய விருதுகளை வென்று, தொழிலதிபராகத் திகழ்ந்து, 1,000ற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி இளைஞர்களுக்கு முன்னோடியாகத் திகழும் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

கனடா

# வாசலிலேயே சிசுவை பிரசவித்த பெண்

வைத்தியசாலையின் வாசலிலேயே பெண்ணொருவர் சிசுவை பிரசவித்த சம்பவமொன்று கனடாவின் கியூபெக் மாகாணத்தின் டிரம்மோன்ட்வில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையின் வெளியே சத்தம் கேட்டதாகவும், அப்போது வெளியே சென்று பார்த்தபோது தாயும் சேயும் இருப்பதனைக் கண்டதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வைத்தியசாலையின் பிரதான நுழைவாயிற் கதவு இரவு நேரத்தில் மூடப்பட்டிருக்கும் எனவும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வேறு நுழைவாயில் கதவு உண்டு எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தெரியாத பெண், பிரசவ வலியில் பிரதான நுழைவாயிற் கதவுக்கு அருகாமையில் சென்று அங்கேயே குழந்தையை பிரசவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த வைத்தியசாலையில் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் பணி நீக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் தாயினதும் சேயினதும் உடல் ஆரோக்கியம் பற்றிய விபரங்களை வைத்தியசாலை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இத்தாலி



# இத்தாலியில் உள்ள இலங்கையர்களுக்கு சிக்கல்

இலங்கையில் வழங்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரம் இத்தாலியில் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், அந்நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்குள்ள இலங்கையர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்த அனுமதிக்கும் முறையின் மூலம் பெருமளவானோர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக இத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**“ இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த விசேட நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது**

இந்த முறைமை செயற்படுத்தப்படாமை காரணமாக, ஏராளமானோர் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த விசேட நடைமுறை பின்பற்றப்பட்டு வந்ததாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மீண்டும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொலராடோ



# வளர்ப்பு பல்லி கடித்து உயிரை விட்ட நபர்

அமெரிக்காவில் 2 அடி நீளமுள்ள வளர்ப்பு பல்லி கடித்ததில் நபரொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்மேற்கு அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் உள்ள கிலா மொன்ஸ்டர்ஸ் வகையைச் சேர்ந்த பல்லிகள் 2 அடி வரை வளர கூடியவை.

இந்நிலையில், கொலராடோவில் வசித்து வந்த 52 வயதான கிறிஸ்டோபர் வார்ட் என்பவர் இவ்வின பல்லிகள் இரண்டை வளர்த்து வந்திருக்கிறார்.

அந்த பல்லிகளில் ஒன்று அவரை 4 நிமிடங்கள் வரை கடித்துள்ளது. அப்போது, உடனேயே அவருக்கு அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

தொடர்ந்து பலமுறை அவர் வாந்தி எடுத்த நிலையில், அவரின் சுவாசமும் நின்றுள்ளது. இதனால், அவர் 2 மணிநேரம் வரை சுயநினைவற்று போயிருக்கிறார்.

இந்நிலையில், உடனடியாக அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்த போதும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

சென்னை

# உயிரையே பறித்த பணமில்லா ‘பக்கோடா’



சென்னை-அம்பத்தூர் பகுதியில் ‘சிக்கன் பக்கோடா’ கடை ஒன்றுக்கு வந்த இளைஞர்கள் சிலர், பணம் கொடுக்காமல் ‘சிக்கன் பக்கோடா’ கேட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், கடைக்காரர் தர மறுத்ததால் அவர்கள், கடை உரிமையாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், வாக்குவாதம் முற்றிப்போய், மோதல் ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரமடைந்த இளைஞர்கள் ஹெல்மெட் மற்றும் மரப்பலகையால் கடை உரிமையாளரை தாக்கியதோடு, கத்தியால் அவரின் கழுத்தில் தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளனர்.

**“ அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் பிடிப்பதற்குள் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். பக்கோடா கேட்டு தகராறு செய்தவர்கள், மது போதையில் இருந்தது தெரியவந்தது**

மேலும், அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் பிடிப்பதற்குள் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

பக்கோடா கேட்டு தகராறு செய்தவர்கள், மது போதையில் இருந்தது தெரியவந்தது. இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில், குறித்த இளைஞர்களை கைது செய்து வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதுடெல்லி



# மதுபானக் வழக்கில் கவிதாவுக்கு தடுப்புகாவல்

மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில், தெலுங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ்வின் மகள் கவிதா, அமுலாக்கத்துறையினரால் கைதான நிலையில், அவரை மார்ச் 23ஆம் திகதி வரை தடுப்புகாவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, ஹைதராபாத்தில் உள்ள கவிதாவின் வீட்டில் அமுலாக்கத்துறை மற்றும் வருமானவரித்துறை அதிகாரிகள் சேர்ந்து சோதனை நடத்தியதில், பல்வேறு முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக கூறப்படுகிறது. அதன் முடிவில் ஆந்திர மேலவை உறுப்பினரான கவிதா அமுலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், கவிதாவை புதுடெல்லி அழைத்துச் சென்ற அமுலாக்கத்துறையினர், அங்குள்ள ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் சனிக்கிழமை (16) ஆஜர்படுத்தினர். அப்போது அவரை மார்ச் 23ஆம் திகதி வரை தடுப்புகாவலில் வைக்க சிறப்பு நீதிபதி உத்தரவிட்டார்.

அமுலாக்கத் துறை தரப்பில் 10 நாட்கள் தடுப்பு காவவல் கோரிய நிலையில் 7 நாட்கள் மட்டும் தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.



## இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# தீர்மானமிக்க போட்டி இன்று

இலங்கை- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது சட்டோகிராமில் இன்று திங்கட்கிழமை (18) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் இத்தொடரின் முதலாவது போட்டியை பங்களாதேஷும், இரண்டாவது போட்டியை இலங்கையும் வென்ற நிலையில் இப்போட்டியானது தீர்மானமிக்கதாக அமைகிறது.

இலங்கையணியின் டில்ஷான் மதுஷங்க காயமடைந்துள்ள நிலையில் குழாமில் வேறு வேகப்பந்துவீச்சாளர் இல்லாத நிலையில் சகலதுறைவீரரான சாமிக கருணாரத்ன அவரைப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக தொடர் மோசமான பெறுபேறு காரணமாக லிட்டன் தாஸை குழாமிலிருந்து பங்களாதேஷ் நீக்கியுள்ள நிலையில் அவரை அணியில் தன்ஸிட் ஹஸன் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



## பயிற்றுவிப்பாளர் ஆகிப் ஜாவிட்

இலங்கையின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் ஆகிப் ஜாவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியை பொறுப்பெடுக்கவுள்ள ஜாவிட், இவ்வாண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு- 20 உலகக் கிண்ணத் தொடர் முடிவு வரையில் பணியாற்ற உள்ளார்.

## ஜுவென்டஸ் செல்லும் லெரோய் சனே?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான லெரோய் சனேயைக் கைச்சாத்திட இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் முயல்வதாகக் கூறப்படுகிறது.

அடுத்தாண்டு வரையில் மியூனிச்சுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 28 வயதான சனே, கழகத்திலிருந்து வெளியேற விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சனேயின் சக மத்தியகள மியூனிச் வீரரான லியோன் கொரெட்ஸ்காவையும் ஜுவென்டஸ் கைச்சாத்திட விரும்புவதாகக் குறிப்பிடப் படுகிறது.



## தலதாவில் தரிசனம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று தரிசனம் செய்துள்ளார் .

யுவராஜ் சிங் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலர் கண்டியில் கிட்டத்தட்ட ஒரு வாரமாக தங்கியுள்ளதுடன் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் உலக லெஜண்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காகவே அவர்கள் கண்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைலோ புட்போல் சம்ப்ஸ்– வட மாகாண கிளி தகுதிகாண் போட்டிகள்:

# இரணைதீவு றோ.க.த.க, விவேகானந்தா, திருவையாறு ம.வி சம்பியனாகின

மைலோ புட்போல் சம்ப்ஸ்-2024 வட மாகாணத் தொடரின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகளில் 10, 12 வயதுக்குட்பட்ட ஆண்களில் இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனாகியது.

12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் குமுழமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்றே இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனானது. மூன்றாமிடத்துக்கான போட்டியில் வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றது.

10 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் பங்கேற்ற மற்றைய பாடசாலையை திருவையாறு மகா வித்தியாலத்தை வென்று இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனானது.

12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டியில் திருவையாறு மகா வித்தியாலயத்தை வென்று விவேகானந்தா கல்லூரி சம்பியனானது. மூன்றாமிடத்துக்கான போட்டியில் சென். திரேசா பெண்கள் உயர்தரப் பாடசாலையை வென்று வட்டக்கச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றது.

அந்தவகையில், 12 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்களில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற பாடசாலைகளும், 10 வயதுக்குட்பட்ட ஆண்களில் பங்கேற்ற இரண்டு பாடசாலை களும், பெண்களில் பங்கேற்ற ஒரே பாடசாலையும் வட மாகாணத் தொடருக்குத் தெரிவாகின.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# புல்ஹாமிடம் தோற்ற டொட்டென்ஹாம்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், புல்ஹாமின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 64 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. லிவர்பூலும் 64 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாமிடத்திலுள்ளது. 63 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி மூன்றாமிடத்திலும், 55 புள்ளிகளுடன் அஸ்டன் வில்லா நான்காமிடத்திலுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 18, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.